**செய்தி வெளியீடு எண்: 109** **நாள்: 13.02.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 12.2.2018 அன்று தலைமைச்செயலகத்தில் பதிவுத்துறை சார்பில் ஒருங்கிணைந்த வலைஅடிப்படையிலான ஸ்டார் 2.0 (STAR 2.0 - Simplified and Transparent Administration of Registration 2.0) திட்டத்தினையும், அதற்கான https://tnreginet.gov.in என்ற புதிய இணையதளத்தையும் துவக்கிவைத்தார்கள்.

பதிவுத்துறையில் மின்னணு ஆளுமை முறைகளை விரிவாக்குவதன் மூலம் பொதுமக்களுக்கான சேவையின் தரம் கணிசமான அளவு உயர்வதோடு வெளிப்படைத்தன்மையும் அதிகரிக்கும்.

வழக்கறிஞர்களாகிய தாங்கள் பதிவுத்துறையுடன் நீண்ட, நெருங்கிய உறவு கொண்டுள்ளீர்கள். பொதுமக்கள் சொத்து வாங்குவதற்கு முன் அதன் உரிமையாளர்களை சட்ட விதிகளுக்கு உட்பட்டு கண்டறிய தங்களின் கருத்துரையை நாடுகின்றனர். அது மட்டும் இன்றி பலர் தங்களிடமே ஆவணங்களும் தயார் செய்து பதிவு செய்கின்றனர். பல உரிமையியல் வழக்குகளுக்கும் பதிவுத்துறை வழங்கும் சான்றிட்ட ஆவண நகல், வில்லங்கச்சான்று, திருமண பதிவு சான்று, பிறப்பு, இறப்பு சான்று போன்றவற்றை பயன்படுத்துகின்றீர்கள்.

தங்களின் பணிகளை எளிமைப்படுத்தவும், தங்களுக்கு தேவைப்படும் சான்றுகளை உடனுக்குடன் தவறின்றி வழங்கவும் இந்த புதிய மென்பொருளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக தேவையான சில விவரங்களை மட்டும் உள்ளீடு செய்து எளிமையாக ஆவணங்களை உருவாக்கலாம். மேலும் முன் ஆவண எண்ணை உள்ளீடு செய்து அதிலிருந்து விவரங்களை நகல் செய்து சில விவரங்களை மட்டும் மாற்றி ஆவணங்களை எளிதில் தயாரிக்கலாம். சில தொடர் ஆவணங்களான அதாவது ஒரே நேரத்தில் பதிவு செய்யப்படும் ஆவணங்களான கட்டுமான உடன்படிக்கை, பிரிபடாத

சொத்து கிரையம். உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு ஆவணம் ஆகியவற்றை ஒரு சேர உருவாக்கவும், பதிவு செய்யவும் வசதி உருவாக்கப்பட்டுள்ளது. ஆவணப்பதிவு தொடர்பான எல்லாசேவைகளும் கணினி வழியாக தங்கள் இருப்பிடத்திலேயே வழங்கப்படுவதால், தாங்கள் பதிவுத்துறை அலுவலகங்களுக்கு நேரடியாக செல்லவேண்டியது வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தில் உள்ள வசதிகள் கீழ்வருமாறு,

1. ஆவணபதிவின்போது உரிய ஆதாரங்கள் இல்லை என ஆவணதரர்களை திருப்பியனுப்பும் நிலையை தவிர்க்க பதிவுக்கு முன்பே ஆவண வரைவை ஆதாரங்களுடன் அனுப்பி சரிபார்க்கும் முறை

2. ஆவணபதிவு செய்யும் நேரத்தை இணையவழி முன் பதிவு செய்து நேரவிரயமின்றி சரியான நேரத்திற்கு சார்பதிவாளர் அலுவலகம் வரும் வசதி

3. பதிவுக்குப்பின் நிலம் மற்றும் கட்டிடத்தைப்பொறுத்து மதிப்பு நிர்ணயம் செய்யவேண்டிய ஆவணங்களின் நிலையை இணையவழி உடனுக்குடன் தெரிந்துகொள்ளும் வசதி

4. ஒரேவருகையில் ஆவணங்களை பதிவுசெய்து உடனுக்குடன் வழங்கும் வசதி

5. பொதுமக்களுக்கு சேவைகளின் நிலை குறித்த குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் அனுப்பும் வசதி அதாவது வரைவு ஆவணம் சார்பதிவாளரால் சரிபார்த்தவுடனும், பதிவுக்குப்பின் ஆவணம் திரும்ப அளிக்க தயாராக உள்ளபோதும், ஆவணம் நிலுவை வைக்கப்படும்போது அதற்கான காரணமும், வில்லங்கச்சான்று மற்றும் சான்றிட்ட நகல் திரும்ப அளிக்கதயாராக உள்ளபோதும், மதிப்பு குறைவு காரணத்திற்காக தனித்துணை ஆட்சியர்களுக்கு அனுப்பப்படும்போதும், இன்னபிற நிலைகளிலும் குறுஞ்செய்தி வழி பொதுமக்களுக்கு தகவல் அளிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது,

6. பொதுமக்கள் இணைய வழி கட்டணமில்லா வில்லங்கச்சான்று 1987-ம் ஆண்டிலிருந்து பதிவிறக்கம் செய்யும் வசதி 11.06.2014-ல் துவக்கப்பட்டு, பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. இதுவரை இத்திட்டத்தின்மூலம் 3 கோடியே 66 லட்சம் வில்லங்கச்சான்றுகள் இணையவழி பதிவிறக்கம் செய்யப்படுள்ளன. தற்போது மேலும் 12 ஆண்டுகளுக்கான தரவுகள் கணினிமயமாக்கப்பட்டு 1975 முதல் நாளது வரை பதிவிறக்கம் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

7. தற்போது நடைமுறையில் உள்ள பட்டாமாறுதல் படிவம் (படிவம் 6) அனுப்பும் வசதி கணினிமயமாக்கப்பட்டு ஆவணப்பதிவுக்குப்பின் பட்டாமாறுதல் விவரங்களை இணையவழி வருவாய்த்துறைக்கு உடனுக்குடன் அனுப்பி அங்கிருந்து இணையவழி பெற்ற ஒப்புகைசீட்டு எண்ணுடன் பொதுமக்களுக்கு குறுஞ்செய்தி மற்றும் ஒப்புகைசீட்டு வழங்கும் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வசதி தற்போது கிராம புல எண்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச்சேவை விரைவில் நத்தம் மற்றும் நகர புல எண்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

8. தற்போது நடைமுறையில் உள்ள அலுவலகத்திற்குச் சென்று வில்லங்கச்சான்று மற்றும் சான்றிட்ட ஆவண நகல் பெறும் வசதியுடன் இணையதளம் வழி விண்ணப்பித்து அதற்கான கட்டணத்தை இணையதளம் வழி செலுத்தி சம்மந்தப்பட்ட சார்பதிவாளரின் இலக்கச்சான்றொப்பமிட்ட வில்லங்கச்சான்று மற்றும் சான்றிட்ட ஆவணநகலை விண்ணப்பதாரரின் மின்னஞ்சலுக்கு அனுப்பும் புதிய வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய வசதியால் வில்லங்கச்சான்று மற்றும் சான்றொப்பமிட்ட ஆவணநகல் பெற சார்பதிவாளர் அலுவலகம் செல்லும் நிலை தவிர்க்கப்பட்டுள்ளது.

9. ஆவணப்பதிவின்போது மோசடிப்பத்திரப்பதிவுகளை குறைக்கும் வகையில் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. ஆவணம் பதிவுக்கு தாக்கல் செய்தவுடன் சொத்தின் உரிமையாளருக்கு குறுஞ்செய்தி அனுப்பும் வசதியும், தற்போதைய ஆவணப்பதிவின்போது முன்

ஆவணப்பதிவின்போது பெறப்பட்ட சொத்தின் உரிமையாளரின் கைரேகையை ஒப்பீடு செய்யும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் ஆள்மாறாட்டங்கள் பெரும் அளவில் தவிர்க்கப்படும்.

10. இணைய வழி மற்றும் நேரடியாகவும் (Online and Online linked offline) பதிவுத்துறைக்குச்செலுத்த வேண்டிய கட்டணங்களை செலுத்தும் முறை மென்பொருளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு தற்போதுள்ள 6 வங்கிகளுடன் மேலும் 5 வங்கிகளை சேர்த்து திட்டமானது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் மூலம் பாரத மாநில வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பஞ்சாப் தேசிய வங்கி, பரோடா வங்கி, அலகாபாத் வங்கி, ஐடிபிஐவங்கி, சிண்டிகேட் வங்கி, சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, யூனியன் வங்கி, விஜயா வங்கி ஆகிய

11. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் தற்போது கட்டணத்தை செலுத்தலாம். இதுமட்டுமின்றி, கட்டணமில்லா தொலைபேசிஎண் 1800 102 5174-ல் சேவை மையம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், தாங்கள் மென்பொருளை பயன்படுத்துவதில் எழும் சந்தேகங்களையும், மேற்கண்ட சேவைகள் குறித்த விவரங்களையும், ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கண்ட சேவைகளை பொது மக்களுக்கு எடுத்து செல்வதில் தங்களது பங்களிப்பு இன்றியமையாதது. ஆகவே தாங்கள் https://tnreginet.gov.in என்ற இணையதளத்திற்கு சென்று தங்களுக்கான உள்நுழைவை ஏற்படுத்திக்கொள்ளவும் இணையதளத்தை பயன்படுத்தி ஆவணங்கள் தயார் செய்யவும் தங்களை பதிவுத்துறை கேட்டுக்கொள்கிறது. தங்களுக்கென ஆவண எழுத்தர்களுக்கு உள்ளது போன்று பிரத்தியேகமான உள்நுழைவு வழங்குதல் தொடர்பாக BAR Council / அரசிடம் உரிய கருத்துரு பெற்று விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட சேவைகளை பயன்படுத்துவதிலும் அவற்றை பொது மக்களுக்கு எடுத்து செல்வதிலும் பதிவுத்துறை தங்களின் பங்களிப்பை அளிக்க கேட்டுக்கொள்கிறது. மேலும் இந்த

மென்பொருளில் புதிய வசதிகள் ஏதும் தேவைப்படின் அதனை தாங்கள் star2.0_suggessions@tnreginet.net என்ற மின்னஞ்சலுக்கு தெரிவிக்கலாம். மென்பொருளை மேலும் எளிமையாக்க தாங்கள் ஏதேனும் கருத்து தெரிவிக்க விரும்பினாலும் மேற்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு தெரிவிக்கலாம். தங்களின் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு உரிய வசதி மென்பொருளில் செய்யப்படும்,

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**